Registered as a News Paper

பக்கங்கள்: 04

விலை ரூபா: 5-00

நல்லூர் இளை நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 21 (06 - 09 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 201

## கண்ணின் கருவிழியை 34 நாட்கள் பாதுகாக்கலாம்

கண்ணின் கருவிழியை 34 நாட்கள் வரை தொடாமல் பாதுகாத்து வைத்திருப்பதற்கான முறையொன்றை பூனேயில் உள்ள தேசிய கால்நடை உறுப்புகள் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது கருவிழிகளை 24 மணி நேரம் மட்டுமே பாதுகாத்து வைக்கமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த புதிய தொழில் நுட்ப முறை 6 மாத காலத்தினுள் மருத்துவ ஆய்வு கூட மட்டத்தில் பரிசோதிக்கப்படும்.

# அகதிகளுக்கான நிவாரணத்தில் வெட்டு;

# மக்கள் அமைப்புகள் போர்க்கோலம்

வீரச்சாவு



### வீரவேங்கை விழி

03-09-1992 அன்று தென்மராட்சிப்பகுதியில்இடம்பெற்ற விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை விழி (சங்கரப்பிள்ளை நிமலேஷ்வரி, ஏழாலை மேற்கு ஏழாலை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## எதிர்ப்பியக்கங்கள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணத்தை அரசு திட்டமிட்டுக் குறைப்பதைக் கண்டித்துத் தாம் வெகுஜனப் போராட்டங்களை நடாத்தத் தயாராக இருப்பதாக தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

அரசின் இச்செயல் மக்களைப் பட்டினி போடும் எனவும் அரசு இதனை மீள்பரிசீலனை செய்யத் தவறினால் தமிழீழம் தழுவிய முறையில் வெகுஜனப் போராட்டம் நடாத்தத் தயாராகிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு இடம்பெயர்ந்த மக்களிற்கான நிவாரணத்தை அரைவாசியாக குறைத்தமையால் இம்மக்கள் பெரும் உணவு நெருக்கடிக்கு உள்ளாகவேண்டிய நிலைமை ஏற்பட உள்ளது தெரிந்ததே.

இதனையடுத்து அரசின் இந் நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்களை நடாத்த மக்கள் அமைப்புகள் திட்டமிட்டுவருகின்றன. மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் என்பனவற்றை விரைவில் நடாத்துவதற்கு இவ் அமைப்புகள் ஏற்பாடுகளை செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கப்பல் சேவையை குறைக்க அரசாங்கம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு கொழும்பில் இருந்து வரும் உணவுக்கப்பல்களின் எண்ணிக்கையையும் குறைப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

தற்பொழுது அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு இரு கப்பல்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளன. ஆனால் அரசின் அண்மைய தீர்மானத்தின்படி உலர் உணவு விநியோகம் அரைவாசியாக்கப்பட்டிருக்கிறது. இதனால் மேற்படி நிவாரண விநியோகத்திற்கு தேவையான உணவுப் பொருட்களின் அளவும் குறையும். எனவே ஒரு கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படும்உணவுப் பொருள்களே மேற்படி நிவாரண விநியோகத்திற்கு போதும் எனக் கருதப்படும் பட்சத்தில் இந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். இவ்விடயம் குறித்து புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது. (க)

அத்தியாவசிய பொருள்களை

## பாதுகாப்பு வழங்கப்பட்டும் சிங்களவர் இடம் பெயர்வு

(வவுனியா)

வவுனியா எல்லைப்பகுதிகளில் வாழும் பல சிங்களவர் பாதுகாப்பில்லை என்ற காரணம் கூறி வெளியேறிவருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் பல சிங்கள மக்கள் மாயமாய மறைந்துபோகிறார்கள் என்று பரவிய வதந்தியை அடுத்து இவ்வாறு அவர்கள் வெளியேறி வருகின்றனர்.

## தேர்தலை நோக்கி போராட மக்கள் தயாராக வேண்டும்

– ஐவன்

(கொழும்பு)

"தேர்தலை நோக்கிய போராட்டத்திற்கு மக்கள் தயாராக வேண்டும். இலங்கையின் அடுத்த சுதந்திரமான தேர்தலை மக்கள் போராடினால் தான் அரசு நடத்தும்" இவ்வாறு பிரபல பத்திரிகையாளர் திரு. ஐவன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் நடந்த தேர்தல்கள் அனைத்தும் குழப்பமான சூழலில் நடத்தப்பட்டன இவற்றில் பல குளறுபடிகள் நடைபெற்றுள்ளது. இதேபோல வரவிருக்கும் பொதுத் தேர்தலை அரசு தட்டிக் கழிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இதனால் இப் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும், குறித்த காலத்தில் நடத்தப்படவும் அனைத்து மக்களும் இணைந்து அரசுக்கெதிராக போராட வேண்டும். இதற்கு அனைத்து மக்களும் இப்பொழுது இருந்தே போராட வேண்டும்.

## இராணுவ பாவனையில் தமிழர் உழவு இயந்திரங்கள்

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடபகுதி தமிழ் மக்களின் உழவு இயந்திரங்கள் பலவற்றை இராணுவம் தமது தேவைக்கு பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல நாட்கள் காத்திருந்து வவுனியா நகருக்குச் சென்ற இந்த உழவு இயந்திரங்கள் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு பல வாகனங்கள் இராணுவத்தின் தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றன. (தி)

## தம்பலகாமம் மாணவர் இடவசதியின்றி அவதி

(தம்பலகாமம்)

தம்பலகாமம் மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் இடவசதி இல்லாது பெரும் கஷ்ட...

வித்தியாலயம், முன்மாதிரித் திடல் தமிழ்ப்பாடசாலை, கோயில் குடியிருப்பு தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய ஏழு...

தடைசெய்யப்பட்ட பொருள்களை

## இரவுநேரத்தில் கடத்திய 3 படையினர் பிடிபட்டனர்

(வவுனியா)

வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்களை இரவு நேரத்தில் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமிற்கு...

கற்பூரவில்லைகள் உட்பட பல பொருள்களை இரவில் தடைமுகாமூடாக எடுத்துச் சென்று தரகர்களிடம் இவர்கள் கொடுத்து வந்துள்ளனர் என்றும்,

வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்களை இரவு நேரத்தில் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமிற்கு ஊடாகக் கொண்டு செல்ல முயற்சித்த இரண்டு பொலிசாரும் ஒரு இராணுவத்தினரும் பிடிபட்டனர்.

பல பொருள்களை இரவில் தடைமுகாமூடாக எடுத்துச் சென்று தரகர்களிடம் இவர்கள் கொடுத்து வந்துள்ளனர் என்றும்,

நீண்ட காலமாக இச்செயலில் இவர்கள் ஈடுபட்டு வந்தார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வாகனத் தரிப்பிடம் மதவாச்சிக்கு மாற்றம்

[வவுனியா]

வடபகுதி நோக்கிச் செல்லக் காத்திருக்கும் வாகனங்களின் தரிப்பிடம் மதவாச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் பொருள்களை கொள்வனவு செய்து வரும் வாகனங்களும் வவுனியா நகரில் பொருள்களைக் கொள்வனவு செய்து வரும் வாகனங்களும் மதவாச்சி பகுதியில் தரித்து நிற்க வேண்டும் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

சோதனைக்கு உட்படுத்தப்படும் பொழுதில் மட்டும் இந்த வாகனங்கள் ஈரற்பெரியகுளம் வாகன சோதனை நிலையப் பகுதிக்கு வரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது [தி]

## மண்டைதீவுப் பகுதியில் பெருங் குண்டுச் சத்தங்கள்

(குருநகர்)

சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டிருக்கும் மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று நண்பகல் குண்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன

குண்டுச் சத்தங்களைத் தொடர்ந்து பெரும் புகை மண்டலம் எழுந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

மேற்படி குண்டு வெடிப்புச் சத்தங்கள் இராணுவத்தினரால் அங்குள்ள பொதுமக்களின் வீடுகளைத் தகர்த்ததனால் எழுந்திருக்கலாமென ஐயம் தெரிவிக்கப்படுகிறது. [21]

## இந்திய வம்சாவளியினரை

# அரசு நாடு கடத்துவது மனித உரிமை மீறலாகும்

இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவளி மக்களை நாடுகடத்த முனைவது முற்றிலும் சர்வதேச மனிதஉரிமை மீறலுக்கு ஒப்பானதோர் செயலாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் முடிவடைந்தும் 84,000 பேரை நாடுகடத்த அரசாங்கம்முனைந்து நிற்கின்றது. அரசாங்கம் இந்த எண்ணத்தைக் கைவிட்டு விட வேண்டும். இலங்கைக் குடியுரிமை வழங்க வேண்டும்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட போது, இந்தியா 5 இலட்சத்து 25 ஆயிரம் பேரையும், இலங்கை 3 இலட்சம் பேரையும் ஏற்றுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மீதமுள்ளவர்கள் தொடர்பாக பின்னர் பேசி முடிவு செய்வதாக முடிவெடுக்கப்பட்டது

அதன்படி 1975 ஆம் ஆண்டு மீதமுள்ள ஒன்றரை இலட்சம் பேரையும் சரிபாதியாக இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இது மக்கள் விருப்பத்திற்கு மாறான பண்டமாற்று ஒப்பந்தமாகும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

உணவு விநியோகம் அரைவாசியாக்கப்பட்டிருக்கிறது. இதனால் மேற்படி நிவாரண

## அத்தியாவசிய பொருள்களை

# கப்பல் மூலம் எடுத்துவர தனியார்துறை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு தனியார்துறையினர் முயற்சி எடுத்து வருகின்றனர்

இம்முயற்சியின் முதற்கட்டமாக அத்தியாவசிய சேவைகள் ஆணைக்குழு அதிகாரிகளுடனும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடனும் தொடர்புகொள்ளப்பட்டிருக்கிறது,

மேற்படி திட்டத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் இவ்விடயம்தொடர்பாகத் தொடர்ந்தும் தேவைப்படும் மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க)

ளில் வாழும் பல சிங்கவர் பாதுகாப்பில்லை என்ற காரணம் கூறி வெளியேறிவருகின்றனர் ... மறைந்துபோகிறார்கள் என்று பரவிய வதந்தியை அடுத்து இவ்வாறு அவர்கள் வெளியேறி வருகின்றனர்.

இங்கு சிங்கள மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகள் அனைத்திலும் சிறிலங்கா இராணுவத்தினர் பகலும் இரவும் காவல் புரிந்து வருகின்றனர்

வவுனியா நகரை அண்டிய பகுதியிலும் கிராமங்களிலும் காவல் அரண்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கையிலும் இராணுவம் ஈடுபட்டுள்ளது

சிங்கள மக்களை பாதுகாக்கும் நோக்குடன் காவல் புரிந்து வரும் இராணுவத்திற்கு சிறிலங்கா பொலிஸார் உதவியாக இருந்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.(தி)

# தமிழ் அகதிகளை அழைப்பது மனிதாபிமானமற்ற செயல்

## சிங்களபத்திரிகையாளர் தெரிவிப்பு

[கொழும்பு]

''சிறிலங்கா அரசு நிவாரணத்தை அரைவாசியாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேசமயம் தமிழகத்தில் இருந்து அகதிகளை திருப்பி அழைப்பது என்பது மனிதாபிமானமற்ற ஒரு நடவடிக்கையாகும்.'' என்று பிரபல சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் கூறியுள்ளார்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணமாக உணவுப்பொருள்களையே வழங்கமுடியாத நிலையில் உள்ள அரசாங்கம் அகதிகளை திருப்பி அழைசது அவர்களையும் பட்டினிச் சாவுக்கு உட்படுத்தும் நடவடிக்கை மனித நேயமற்ற ஒரு முட்டாள்தனமான நடவடிக்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். பி. பி ஸி நிருபருக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

[வவுனியா]

மதங் கொண்ட காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

சில தினங்களுக்கு முன்னர் நெடுங்கேணி இரதிமடு பகுதியிலேயே இது நடந்தது.

இரவுவேளை வாழைகளை யானை முறிக்கும் சத்தம் கேட்டு அதை விரட்டச் சென்றவரே யானையினால் தாக்கப்பட்டு இறந்தார்.

செல்வம் என்று அழைக்கப்படுபவரே பலியானார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

(தம்பலகாமம்)

தம்பலகாமம் மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் இடவசதி இல்லாது பெரும் கஷ்டமுறுகின்றனர்.

தம்பலகாமம் கொத்தணி பிரிவிலுள்ள முள்ளிப்பொத்தானை அரசினர் தமிழ்பாடசாலை, சிவசக்தி தமிழ்ப்பாடசாலை, புதுக்குடியிருப்பு தமிழ்ப்பாடசாலை, பாலம்போட்டாறு தமிழ்ப்பாடசாலை, பட்டிமேடு ஸ்ரீசாரதா வித்தியாலயம், முன்மாதிரித்திடல் தமிழ்ப்பாடசாலை, கோயில் குடியிருப்பு தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகளில் புதுக்குடியிருப்பு பாடசாலையில் மட்டுமே தற்போது மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்

ஏழு பாடசாலைகளையும் சேர்ந்த பெருந் தொகையான மாணவர்கள் இடவசதியின்றிப் பெரிதும் அவதியுறுகின்றனர்.

# பரீட்சைக்கு தோற்ற ஆசிரியருக்கு கடமை லீவு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் படிப்பு (பகுதிநேர) டிப்புளோமா பயிற்சி நெறியைத் தொடரும் ஆசிரியர்களுக்கு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சைக்கு முந்திய ஒரு மாதகாலத்திற்கு சம்பளத்துடனான படிப்பு லீவு வழங்கலாமென அமைச்சு சுற்று நிருபம் அனுப்பியுள்ளது. இப்படிப்பு லீவை யாழ் பல்கலைக் கழகத்தில் பயிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 13-9 92 முதல் 13-10-92 வரை வழங்கும்படி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு வைபவத்தினை நேற்றுக் காலை யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தொடக்கி வைத்தார்

பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் ரி நடராசா சமுகமளிக்க முடியாத நிலையில் உபவேந்தர் தலைமையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

மொத்தம் 447 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. ஆங்கிலத்திலும் தமிழ் மொழியிலும் அமர்வுகள் நடைபெற்றன.

# மாவீரர்களை நினைவு கூர்ந்து வீரவணக்கம் செய்வோம்

மாவீரர் நாள்; தமிழீழத்தின் விடுதலைக்காக உயிரைத் தற்கொடைசெய்த போராளிகளை நினைவு கூரும் நாள், வீரவணக்கம் செய்யும் நாள் 5000க்கு மேற்பட்ட போராளிகள் எங்களின் விடுதலைக்காக தங்களின் உயிர்களைத் தந்திருக்கின்றனர்.

இவ்வாறு மாவீரர் நாள் குழுவினர் வெளியிட்டுள்ள மாவீரர் நாள் தொடர்பான பிரசுரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் இப்பிரசுரத்தில்;

உறவுகள், பாசங்களைத் துறந்து வந்தவர்கள்; உறக்கம், உணவு என்பனவற்றை மறந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

**இயற்கைஎம்உடைமை-அதை காப்பது நம் கடமை.**

## வரி விளம்பரம்

your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.

(Opposite old Vihare)

(சி-4970)

### புதிய மீரா நாவல்

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழும் நாவல்கள். நீங்களும் படித்துப் பாருங்கள். இதுவரை வெளிவந்த இருபத்தியொரு ''மீரா'' நாவல்களில் எட்டு நாவல்கள் மட்டுமே விற்பனைக்குண்டு. பூபாலசிங்கம், மக்மிலன், மண்டேலா புத்தக சாலைகள் யாழ்ப்பாணம்.

(3123)

### அனுமதி மாதிரிப் பரீட்சை

(ஆண்டு 5)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5 மாணவர்களுக்கு) 06-09-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி தமிழ், கணிதம், ஆங்கிலம் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(3128)

### காணவில்லை

பிறவுண், கறுப்பு கலந்ததும் நெற்றியில் கறுப்பு பொட்டு அமைந்ததுமான, 2வயது நிரம்பிய ஆண் பொமனேரியன் நாய்க்குட்டி, காரைக்காடு, கோண்டாவில் மேற்கில் காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் மகாலிங்கம், அரைக்கும் ஆலை புகையிரத வீதி, கோண்டாவில் முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3142)

## இராணுவத்தை கரடி தாக்கியது

(கொழும்பு)

கரடியால் தாக்கப்பட்டுக் காயமுற்ற நிலையில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் பொலநறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சிங்கரபுரப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோது இவர் கரடியொன்றினால் தாக்கப்பட்டார். எனினும் கூட இருந்த மற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கரடியைச் சுட்டுக்

## மானம் காக்க வேண்டின் களத்தில் போராட வேண்டும்

- யோகி

(உரும்பராய்)

''இந்த மண்ணின் வீரம் மானம் காக்க வேண்டுமானால் களத்தில் போராட வேண்டிய நிலை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. தமிழின் சிறப்பு வள்ளுவப் பெருந்தகை காட்டும் வீரம் மானம் போன்றவற்றில் மட்டும்தான் தங்கியுள்ளது என்று அல்ல மாறாக அது இந்த மண்ணின் போராட்டக் களத்தில் இணைக்கப்படுகின்ற பொழுது தான் இன்னும் சிறப்பான பெருமையை எமக்குத் தரும். வீரம், மானம் இல்லாத வாழ்வு வெறும் பிணத்துக்கு சமமாக அமைந்துவிடும்'' இவ்வாறு உரும்பராய் இந்துக்கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற முதலாம் நாள் திருவள்ளுவர் விழாவில் திரு.யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் இன்று களத்தில் நிற்கின்ற போராளிகளை எதிரி பார்த்து நடுநடுங்குகிறான் ஏனென்றால் அவர்கள் வீரத்தையும் மானத்தையும் போராட்டப்பண்புகளுடன் இணைத்து இந்த மண்ணின் மானத்தை காத்திட திட சங்கற்பம் பூண்டுள்ளார்கள். தூங்காமை, துணிவு எம்மிடம் இருக்கின்ற போது பகைவன் தன் நிலையை இழந்துவிடுவான். எதிரியிடம் பிச்சையெடுத்து வாழ்வதை விட எதிரி இல்லாத காலத்தைஎம் மண்ணில் நிலை நாட்டவேண்டும் எனவே ஒவ்வொருவரும் இம்மண்ணின் பெருமையை உலகறியச் செய்ய திருவள்ளுவப் பெருந்தகை காட்டும் வீரம் மானத்துடன் இந்த மண்ணை மீட்டெடுப்போம் என்றார். (3)

## அறிவித்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன் புரிச்சங்கத்தினது 10-09-1992 திகதியில் நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் 30-10-92-ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

சா.ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

[3134]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் :
20 - 04 - 1975

வீரச்சாவு :
06 - 09 - 1989

திதி :
06 - 09 - 1992

### வீரவேங்கை ஆண்டவன்

(சிலுவைராசா ஜெயபாஸ்கரன்)

விடுதலைப்பாதையில் ஆண்டவன்
இவன் மொட்டு விரிந்த காலம்
வசந்தத்தை தேடவில்லை - இவன்
விடியலைத் தேடினான் - தன்னை
மண்ணிற்காய் மாவீரனாக்கினான்

## இலங்கை வங்கி

## மகளிர் பொற்கணக்கு அறிமுகம்

53 வருட சேவை நிறைவையிட்டு
மகளிருக்கென
விசேட சிக்கன சேமிப்புத் திட்டம்

இடம்,
தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய
உற்சவகால விசேட கருமபீடம்

காலம் :
07 - 09 - 92 திங்கட்கிழமை காலை 11.30 மணி

'சிவத்தமிழ்ச்செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
''மகளிர் பொற்கணக்கு''களை
ஆரம்பித்துவைப்பார்கள்.

பெண்மணிகளே!

- உங்கள் சேமிப்பிற்கு உத்தரவாதம்
- கவர்ச்சிகரமான வட்டிவீதம்
- விசேட கடன் வசதிகள்
- அதிஷ்டசாலிகளுக்கு சேமிக்கும் போதே பல பரிசில்கள்

1. சிங்கப்பூர், பாங்கொக், கோலாலம்பூர் சென்னை, திருச்சி சென்றுவர இலவச விமானப்பயணச்சீட்டுக்கள்
2. தங்க நாணயங்கள்
3. பணப்பரிசில்கள்
4. வெகுமதிப்பொருள்கள்

பரிசில்களுக்கான தெரிவுகள் இரு தடவைகளில் :

★ சர்வதேச மகளிர் தினமான 08-03-93அன்றும்
★ இலங்கை வங்கியின் 54 ஆவது வருட பூர்த்தியான 1993ஆகஸ்ட் திங்களிலும்இடம்பெறும்

நீங்களும்
''மகளிர் பொற்கணக்கு''களை
ஆரம்பித்து பல நன்மைகளைப் பெறுவீர்

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி

மாவட்ட காரியாலயம்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்

(சி-5012)

## 60-ம் நாள் நினைவலைகள்



கொழும்பு கோட்டை சம்பவம்

## செய்தியாளரை தாக்கியோர் புகையிரத பயணிகள் அல்ல

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக பத்திரிகையாளரைப் பயணிகள் தாக்கினார்கள் என்ற கூற்றை சிறிலங்கா பயணிகள் சங்கம் மறுத்துள்ளது

ஆகஸ்ட் மாதம் 7 ஆம்திகதி நடந்த இந்தத் தாக்குதல் சம்பவத்தில் புகையிரதப் பயணிகள் சம்பந்தப்பட்டிருக்க மாட்டார்கள் என்று இந்தச் சங்கத்தின் செயலாளர் எஸ் எம். சந்திரசேகராவின் அறிக்கை ஒன்று கூறுகின்றது.

பத்திரிகையாளர் மீது அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் கண்டனத்துக்குரியவையாகும் என்றும், கதிர்காமம் பாத யாத்திரையின் போது பத்திரிகையாளர் தாக்கப்பட்டமை, கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்பாகப் பத்திரிகையாளர் தாக்கப்பட்டமை மற்றும் கனத்தையில் பத்திரிகையாளர் தாக்கப்பட்டது அத்த பத்திரிகை கேலிச் சித்திரக்காரர் ஜிப்றி ஜூறூஸ் ஆகஸ்ட் 17ஆம் திகதி தாக்கப்பட்டதையும் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கும் செய்தியாளர் தாக்கப்படாமல் சுதந்திரமாகச்செயலாற்ற இடமளிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிபர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக கோட்ட மட்டத்தில் நடைபெறும் கலந்துரையாடல் ஒன்றிற்கு சகல கொத்தணி மற்றும் பாடசாலை அதிபர்கள் அவ்வக் கல்விக் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடல் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 07-09-92 முற்பகல் 10 00மணிக்கு பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திற்கான கலந்துரையாடலும், இராமநாதன் கல்லூரியில் 07-09-92 பிற்பகல் 2 00 மணிக்கு மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்கான கலந்துரையாடலும் டிறிபேக் கல்லூரியில் 08-09-92 முற்பகல் 10.00 மணிக்கு தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்கான கலந்துரையாடலும், வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 08-09-92 பிற்பகல் 2.00 மணிக்கு வடமராட்சிக் கல்விக் கோட்டத்திற்கான கலந்துரையாடலும், சாதனா பாடசாலையில் 09-09-92 பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண கல்விக் கோட்டத்திற்கான அதிபர்கள் சந்திப்பும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாதாந்த உதவி பணம்

(யாழ்ப்பாணம்)

மே, ஜூன் மாதங்களுக்கான அரசினர் பொதுசன மாதாந்த உதவிப் பணம் நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

இம்மாதாந்த உதவிப்பணம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஊர்காவற்றுறை தபாலகம் நாரந்தனை, கரம்பொன் தெற்கு, கரம்பொன் கிழக்கு, புளியங்கூடல், சுருவில் உபதபாலகங்களில் வழமைபோல் அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் கிராம சேவகர்களினால் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வெளிவாரிப் பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி பரீட்சைக்கான நேரஅட்டவணையும் அனுமதி அட்டைகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. இம்மாதம் நடுப்பகுதியில் இப்பரீட்சை ஆரம்பமாகின்றது சகல பரீட்சார்த்திகளும் இப்பரீட்சைக்கு தயாராகுமாறு வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவு கேட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

1992 - 09 - 06

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - புளி

மற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கரடியைச் சுட்டுக் கொன்றமையினால் அவர் காயமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார்.

## தற்கொலை

வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியை ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இச் சம்பவம் நடைபெற்றது. 36 வயதான நான்கு பிள்ளைகளின் தாயான விஜயலட்சுமி என்பவரே மரணமானவர். வவுனியா நகர் பாடசாலை ஒன்றில் இவர் ஆசிரியையாகக் கடமையாற்றுபவர் எனத் தெரியவருகிறது.

## வரட்சியினால் வேளாண்மை பாதிப்பு

மட்டக்களப்பில் சிறுபோக வேளாண்மையினால் விவசாயிகள் பலத்த நட்டமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நிலவும் கொடிய வரட்சியே இதற்கும் காரணமாகும்.


சனி நீராடு

ஔவைப்பிராட்டியின் அமுதமொழி.

நம் முந்தையோர் கண்ட சீரிய வழியில்,

சிகைக்காய், இலுப்பை அரப்பு, எலுமிச்சம் கோது, பயறு, வெந்தயம் கொண்டு தயாரித்த,

ஒலிவ் ஸ்நானப் பவுடர் எங்கும் விற்பனையாகின்றது.

பக்கற் ஒன்றின் விலை ரூபா 3/- மட்டுமே.

25 பக்கற் கொண்ட காட் ரூபா 60/- மட்டுமே.

ஒரு மில்க்வைற் உற்பத்தி
(சி/5010)


விடியலைத் தேடினான் - தன்னை
மண்ணிற்காய் மாவீரனாக்கினான்

அம்பாள் வீதி,
மல்வம், உடுவில். (3140)

குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்

# 60-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

பிறப்பு
9 — 09 — 1973



வீரச்சாவு
09 — 07 — 1992

## லெப்டினன்ட் வீமா

(தங்கராசா இரவீந்திராதேவி)

(அச்சுவேலி புனித சென் திரேசா மகளிர் கல்லூரி பழைய மாணவி)

வீமா!

பெற்றோரை இழந்த பின்பும்
உற்ற உடன் பிறப்பு மூவர்
பற்றோடு விடுதலை அணிசேர்ந்தீர்
பெற்றவளை நேசிக்க வாய்ப்பின்றி
பெற்றமண் காக்க புதுவீரப் புலியானாய்
இற்றைவரை எதிரி களமாடி நின்று
ஈற்றினிலே மாவீர மலரானாய்
பற்றி எரிகின்ற பாசத்திலின்னும்
பரிதவித்து நிற்கின்ற எம்மிடத்தில்
காற்றோடு நீ சொன்ன கதைவந்து
கண்ணீரைத் துடைத்தெறியச் சொல்கிறதே!

(இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்கள் அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்)

06 - 09 - 1992 (இன்று) நடைபெறவிருக்கின்ற அந்தியேட்டிக் கிரியையில் உற்றார், உறவினர், சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

நவக்கிரி,
புத்தூர். [3132]



## லெப்டினன்ட் வீமா (குயிலி)

(தங்கராசா இரவீந்திராதேவி)

வீரப்பிறப்பு: 29-09-1973

வீரச்சாவு: 09- 7-1992

பெற்றோரை இழந்திட்ட போதும்,
பொன்னாட்டை நேசித்த புலியே!
கண்களிலே நெருப்பேந்திக்
களத்தில் நின்ற காவியமே!
உன்னுதிரக் கொடியில் பூத்த
அக்காவும் வே கை, அண்ணாவும் புலிவீரன்
நீயும் தமிழீழத் தாகம் சுமந்த புலி
களத்தில் உந்தன் கால்கள் பதித்தாய்
எதிரியைப் பார்த்து எக்காளம் இட்டாய்
வருவாயா? வந்து என் மண்ணைத்
தொடுவாயா? என்று
நிமிர்ந்து நின்ற நெடிய மலையே!
உந்தன் நினைவை நெஞ்சில் சுமப்போம்
தலைவன் வழியில் பயணம் தொடர்வோம்.

நவக்கிரி,
புத்தூர்.

போராளி

[சி-5009]

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - புளியங்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளினாற் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட -

★ **கரன்** (புளியங்குளம், வவுனியா)

★ **மகிந்தா** (செல்லையா சதானந்தன் - முல்லைத்தீவு)

★ **விஜி** (விஜயராகவன் - ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு)

★ **வரன்** (மகேஸ்வரன் - பொக்கணை)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி - இராமநாதபுரம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**பைரவி** (சங்கரப்பிள்ளை பார்த்திபன் - மண்டூர்-3, மட்டக்களப்பு)

**கோபிநாத்** (விஜயன் தமார் - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு)

**லெப். பெரியண்ணன்** (ஐயாத்துரை அமிர்தலிங்கம் - 1-ம வட்டாரம, கொக்குதொடுவாய், மணலாறு)

**கோபால்** [வேலாயுதம் சிவலிங்கம் - 1ஆம் வட்டாரம், கொக்குத்தொடுவாய், மணலாறு)

**2-ம்லெப். காதர்** [பரமானந்தன் மணிவண்ணன் - புதையிரத நிலையத்தடி, மன்னார்]

**கஜன்** [செல்வராசா தமிழ்ச்செல்வன் - 2-ம்வட்டாரம், புங்குடுதீவு, யாழ்ப்பாணம்]

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். அகிலன்** [கந்தையா தேவதேவா - 9, இருதயபுரம், மட்டக்களப்பு]

**சுது** [அமரசிங்கம் மணியம் - 8ஆம் வட்டாரம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு]

**2-ம்லெப். ஈசன்** [சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் - கணேசபுரம், பரப்புக்கடந்தான், மன்னார்]

**செட்டி** [பாக்கியநாதன் பிறேம்குமார் - விடத்தல்தீவு, மன்னார்]

**2-ம்லெப். பிறேம்குமார்** [கந்தையா தயாபரன் - கரவெட்டி மத்தி, யாழ்ப்பாணம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5007)

### சிந்தனைக்கு

உற்சாகமாக முன்வந்து உவகையுடன் தியாகங்கள் செய்வதிலேயே என்வாழ்வின் இன்பம் அடங்கியுள்ளது.

- ஜான் ஸெல்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் - 05

# முதலில் நண்பருக்கு

"தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முழுமையான தீர்வொன்றை முன்வைப்பதன் மூலமும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற விடுதலைப் புலிகளுடன் அர்த்தமுள்ள பேச்சு வார்த்தைகளை நடத்துவதன் மூலமுமே இனப்பிரச்சினைக்கு முழுமையான நிரந்தரத் தீர்வு காண முடியும்". இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற எம் பி. யோசப் பரராசசிங்கம் கருத்தரங்கொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

மேலும் இந்த யதார்த்தமான நிலையை அரசாங்கம் உணர வேண்டும் எனவும், அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணாது இழுத்தடித்துச் செல்லுமானால் உலக அரங்கில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் காரணமாக நாளடைவில் நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. இன்றைய அரசியல் யதார்த்த நிலை பற்றித் தெளிவுடன் பேசியிருப்பது ஓர் ஆச்சரியப்படத்தக்கதொன்று. இதில் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற இரு அம்சங்களில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பது மிகவும் முக்கியமான தொரு விடயமாகும்.

இன்றைய யதார்த்த சூழ்நிலையை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் புரிந்து கொள்ளச் சுமார் இரண்டரை வருடங்களுக்கு மேல் சென்றுள்ளது. இருப்பினும் இதன் பின்னராவது அவர் இதைப் புரிந்து கொண்டமையும், அதனை ஏற்றுக் கொண்டமையும் ஒரு முன்னேற்றகரமான காரியமாகும்.

ஆனால், புலிகளுடன் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும் என்ற யதார்த்த நிலையும் அல்லது நாடு பிரிந்து போய்விடும் என அரசிற்கு விடுத்த எச்சரிக்கையையும், அரசிற்கு விடுக்கும் முன்னர் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. இதனை கொழும்பிலுள்ள தமது நட்புச் சக்திகளான தமிழ்க் குழுக்களுக்கு தெரிவித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

நியாயமான அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படாமல், புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணப்பட முடியாது என்பது முன்னரே பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது ஆனால் இவ்யதார்த்த நிலையைச் சிறிலங்கா அரசாங்கமும், தமிழ்க் குழுக்களும் தான் ஏற்றுக் கொள்ளவில்லை. இராணுவ ரீதியான தீர்வொன்றின் மூலம் புலிகளை ...

## சிறிலங்கா ஜனாதிபதி 23 ஆம் திகதி பாக். விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சார்க் நாடுகளுக்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இவர் இம்மாதம் 23ஆம் திகதி முதன்முதலாக பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார். அங்கிருந்து நேபாளத்திற்கும் அக்டோபர் முதலாம் திகதி இந்தியாவிற்கும் அங்கிருந்து பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் செல்ல திட்டமிட்டுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதியாக இவர் பதவி ஏற்றபின் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப்பயணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பயணத்தை சார்க் நாடுகளின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி தவிர்க்க முடியாதிருப்பதாக பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

## 500 குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதி

அண்மைக்கால சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள 500 குடும்பங்களுக்கான குடியிருப்பொன்று தென்மராட்சியில் உருவாக்கப்படவுள்ளது.

அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டு இக்குடியிருப்புகள் உருவாக்கப்படவுள்ளன.

இக்குடியிருப்புகளை உருவாக்குவதற்கு ஏற்படும் செலவில் 75 வீதத்தை யாழ் செயலகமும் 25 வீதத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் பொறுப்பேற்கவுள்ளன.

இதேவேளை இம் மக்களுக்கான ஏனைய வசதிகளான பாடசாலை, பாலர் பாடசாலை, மருத்துவம், தொழில் வாய்ப்புக்களுக்கான கடனுதவி போன்றவற்றுக்கான நிதியை தமிழர் புனர்வாழ்வுக் கழகமே தமதுசொந்தப்பணத்தில் வழங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இதுபோன்றதோர் 800குடும்பங்களுக்கான குடியிருப்பு ஒன்றை அனைத்து அடிப்படை வசதிகளுடனும் இக்கழகம் ஏற்கனவே ஏற்படுத்திக் கொடுத்திருப்பது தெரிந்ததே.

## தபால் விநியோக மோசடி ஊழியர்கள் நால்வர் கைது

(வாகரை)

வாகரையில் வெளிநாட்டு காசோலைகள், டாலர்நோட்டுகள் முதலியவற்றை திருடி வந்ததாக கூறப்படும் தபால் திணைக்கள ஊழியர்கள் நால்வர் வாகரைப் பகுதியில்சிறிலங்காப் பொலிசாரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

தபால் விநியோகிக்கும் மூவரும் கடிதங்களை தரம் பிரிக்கும் ஊழியர் ஒருவரும், மேலும் இவற்றை மோசடி செய்துமாற்றிக்கொடுத்தமுஸ்லிம் வர்த்தகர் ஒருவரும்கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

# சிறிமாவோ அரசியலில் ஓய்வுபெற மகாநாயக்க தேரர் ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அரசியலில் இருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளும்படி மல்வத்தை பீட மகாநாயக்க தேரர் ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் திருமதி சிறிமாவோ மல்வத்தைபீட மகாநாயக்கரைச் சந்தித்த போது இவ் ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

"உங்களுக்கு வயதாகி விட்டது ஆகவே இனிமேல் கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாம் கூட்டங்களில் உரை நிகழ்த்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நாட்டில் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க எவராலும் முடியாது. இதனால் நாம் ஒன்றிணைந்து நாட்டின் உயர்வுக்காக பிரார்த்திப்போம்" என்று மகாநாயக்க தேரர் திருமதி சிறிமாவோவிற்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக தெரியவருகிறது.

உட்கட்சிப் பூசல்களாலும் தேர்தல்களின் போது கட்சி தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருவதாலும், அண்மையில் ஜனாதிபதி தேர்தல் வழக்கின் தோல்வியாலும் திருமதி சிறிமாவோவின் அரசியல் வாழ்வு பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்நிலையிலும் திருமதி சிறிமாவோ மகாநாயக்க தேரரின் ஆலோசனைக்கு செவி சாய்ப்பாரா என்பது குறித்து நம்பகரமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## யாருடையது என்பதல்ல தீர்வே முக்கியமானது

இனப் பிரச்சினைக்கு யார் தீர்வை விரைவாக முன்வைக்கின்றார்கள் என்பது முக்கியமல்ல, தீர்வே முக்கியமானதாகும்.

மேற்கண்டவாறு கண்டி அஸ்கிரிய மகாநாயக்க தேரர் தன்னைச் சந்தித்த எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட மகாநாயக்க தேரோ சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவிடம்தெரிவித்துள்ளார்.

மேலும் முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள பிரேரணை பற்றி நன்கு ஆராயப்பட்ட பின்பே அதுபற்றிக் கருத்துக் தெரிவிக்க முடியுமெனவும் மகாநாயக்கதேரர் தெரிவித்துள்ளார்.

## கடல் தொழிலாளருக்குதவ செஞ்சிலுவை முன்வந்தது

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கடல் தொழிலாளர் குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகளைக் கொடுத்து உதவ இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 3,200 மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகளை வழங்குவதற்கு கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகம் கொள்கையளவில் சம்மதம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [42]

## சனசமூக நிலையங்களின் நன்கொடை அதிகரிப்பு

சனசமூக நிலையங்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் நன்கொடை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் செயற்படும் சனசமூக நிலையங்களுக்கே இந்நன்கொடை வழங்கப்படவுள்ளது இதன்படி இவ்வருடம் 1200 ரூபா நன்கொடையை 41 சனசமூக நிலையங்கள் பெறவுள்ளன. இதேவேளை 24 சனசமூக நிலையங்கள் நன்கொடைக்கு விண்ணப்பிக்காததினால் இவர்களுக்கான நன்கொடை வழங்கப்பட முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் இவ் ஆண்டு திறமையாக செயற்படும் நிலையங்களுக்கான கொடுப்பனவுகள் மேலும் அதிகரிக்கப்படும் எனவும் யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார் [42]

# பொஸ்னியாவிற்கான நிவாரண உதவி: ஐ. நா. சபையினால் இடைநிறுத்தம்?

பொஸ்னியத் தலைநகர் சரயோவோவில் நிவாரணப் பொருள்களை ஏற்றிச் செல்லும் எல்லா விமானங்களையும் ஐ நா இடை நிறுத்தியுள்ளதாய்த் தெரியவருகிறது.

நிவாரண உதவிகளை கொண்டு சென்ற இத்தாலிய விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது

விமானத்தின் பாகங்களும் நால்வரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டதாக ஜெனிவாவில் உள்ள ஐ நாவின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா? அல்லது விபத்துக்குள்ளானதா என்பது இன்னமும் தெரியவரவில்லை.

அமெரிக்காவும் பிரிட்டனும் கூட சரயோவோவிற்கான விமான நிலைய உதவியை விமானம் வீழ்ந்ததற்கான காரணம் தெளிவாகும்வரை இடைநிறுத்தியுள்ளன.

# சட்டங்களையும் தார்மீகத்தையும் பலமான அரசுகள் மீறுகின்றன

## ஆந்திராவில் கண்ணிவெடி பத்து பொலிசார் பலி

(சென்னை)

ஆந்திரப் பிரதேசத்தில் கம்பம் மாவட்டத்தில் நடந்த கண்ணிவெடித்தாக்குதல் சம்பவம் ஒன்றில் 10 பொலிசார் கொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த ஒரு வார காலத்தினுள் நக்சலைட்டுகளால் பொலிசாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய தாக்குதல் சம்பவம்இதுஎன கூறப்படுகிறது.

கடந்த வாரம் சனிக்கிழமையும் 7 பொலிசார் கொல்லப்பட்டனர்.

போபர்ஸ் பீரங்கி ஊழல்

## சி. பி. ஐ. அறிக்கை செல்லுபடியற்றது

(டில்லி)

இந்திய அரசியலில் பெரும் சர்ச்சைகளை உண்டாக்கி வரும் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் சம்பந்தமான வழக்கில் மத்திய புலனாய்வு ... தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை முப்பத்தொரு மாத கால நீதி மன்றப் பரிசீலனையின் பின் நேற்று நிராகரிக்கப்பட்டது.

தீர்வொன்றின் மூலம் புலிகளை ஒடுக்கி விட்டு தமது இஷ்டத்திற்கு ஓர் தீர்வு காணலாம் எனச் சிங்கள அரசும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் கற்பனை செய்தன இந்நிலையில் அரசினதும், தமிழ்க் குழுக்களினதும் நண்பரான யோசப் பரராசசிங்கம் அரசாங்கத்திற்கு மட்டும் யதார்த்த நிலையை சுட்டிக் காட்டியது போதாது தமது நண்பர்களுக்கும் யதார்த்த நிலையைச் சுட்டிக் காட்டியிருத்தல் வேண்டும்.

ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் நிர்ப்பந்தத்தின் பேரில் சிலவேளை இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு காணவேண்டும் எனப் பேச்சுக்காக வெனினும் குறிப்பிடினும், தனியாக இராணுவத் தீர்வைப் பற்றித் தமிழ்க்குழுக்களே அதிகம் பேசி வருகின்றன ஆகையினால். இன்றைய அரசியல் யதார்த்த நிலையை தமது நண்பர்களுக்கு மட்டக்களப்பு எம் பி முதலில்போதிப்பது நல்லது

மேலும் இன்று உலகெங்கிலும் உள்ள தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. தேசிய இனங்களின் சுயநிர்ணயக் கோரிக்கையால் உலக வல்லரசாக இருந்த சோவியத் ரஷ்யா சிதைந்து 15 துண்டுகளாக ஆகியது. அங்கு மேலும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. அதேவேளை செக்கோசிலவோக்கியா செக் எனவும், செலவோக்கிய எனவும் இரண்டாகப் பிரிந்து செல்ல சமாதான முறையில் முடிவெடுத்துள்ளது. இதேவேளை யூக்கோசெலவோக்கியாவில் இருந்த குடியரசுகள் சில சுதந்திர நாடுகளாக மாறிவிட்டன. சில பிரிந்து செல்ல போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால், இவ் உலகின் போக்கையும் தமிழ்க் குழுக்கள் கண்டுகொள்வதாக இல்லை. ஐக்கிய இலங்கை என்றும் பிரேமதாசாவே தமது தலைவர் என்றும் முழங்கிவருகின்றன அதாவது, உலக மக்களின் உணர்வுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தவிர்க்க முடியாது சம்பந்தப்பட்ட நாடுகளும், வல்லரசுகளும அதைஏற்றுக் கொள்வதையும் இவர்கள் கண்டுகொள்வதாக இல்லை. இந்நிலையையும், தமது நண்பர்களுக்கும் மட்டக்களப்பு எம். பி விளங்க வைப்பது நல்லது.

அதாவது சிங்கள அரசிற்கு உபதேசம் செய்யும் முன் தமது நண்பர்களுக்கு உபதேசம் செய்வது சுலபமானதும், அவசியமானதுமாகும். இல்லாவிட்டால் விரைவில் காலவெள்ளம் அவர்களை அடித்துச் சென்றுவிடும்.

---

— மலேசியப் பிரதமர் கண்டனம்

(ஜகார்த்தா)

பலவீனமான நாட்டுக்குள் புகுந்து அந்தப் பலவீனமான நாட்டின்அரசுத் தலைவரைப் பிடித்துச் செல்வதைக் காண்கிறோம். அதிகாரம் மிக்கப் பலமுள்ள நாடுகள் சர்வதேச கூட்டங்களையும், தார்மீக விதிமுறைகளையும் தூசாக அலட்சியப் படுத்துவதையும் காண்கிறோம் என்று மலேசியப் பிரதமர் மகத்தூர் முகமட் கூறினார்.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் அணிசேரா நாடுகள் உச்சி மாநாட்டில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.

பலவீனமான நாட்டிற்குள் துருப்புக்கள் புகுந்து தமது நாட்டின் சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்காகஅந்தநாட்டு அரசுத் தலைவரைப் பிடித்துச் செல்கிறார்கள் என்றும் -

ஒரு நாட்டின் பிரஜையை அவரது சொந்த நாட்டிலேயே மற்றொரு நாட்டின் அதிகாரிகள் தனது சொந்த நீதிமன்றத்தின் உத்தரவு இல்லாமலேயே கடத்திச் செல்கிறார்கள் என்றும்,

பலமுள்ள நாடு பலவீனமான நாடுமீது தமது திட்டங்களைத் திணிக்கின்றது, சர்வதேச நீதிமன்றத் தீர்ப்புகள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. ஜனநாயக நாடுகள் இன்னொரு நாட்டு அரசுத் தலைவரை கொல்ல முயற்சிப்பதைப் பார்க்கிறோம் என்றும் மலேசியப் பிரதமர் டாக்டர் மகத்தூர் முகமட் மேலும் கூறினார்.

# இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் ஜகார்த்தாவில் சந்திப்பு

(ஜகார்த்தா)

ஜகார்த்தா நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகள் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப்பும், இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவும் நேற்று முன்தினம் சுமார்ஒன்றேகால் மணிநேரம் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சு வார்த்தையின்போது இரு பிரதமர்களுடனும் எந்த அதிகாரிகளும் உடன் இருக்கவில்லை.

காஷ்மீர், பஞ்சாப் உட்பட பல விஷயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. பேச்சுவார்த்தை உபயோகமானது என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் கூறியிருக்கிறார். பேச்சுவார்த்தையின் பயன் உடனடியாகத் தெரியாது என்றாலும் திருப்திகரமான ஒன்று என்று இந்தியப் பிரதமரும் கூறியிருக்கிறார்.

## தாய்வானுக்கு எவ் 16ரக விமானங்கள் விற்கப்படும்?

தாய்வானுக்கு எவ். 16ரக போர் விமானங்களை விற்பது என அமெரிக்கா முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதேசமயம் அமெரிக்காவின் இந்த முடிவை சீனா எதிர்த்துள்ளது, அது தனது ஆட்சேபனையை அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது.

ஒரு பக்கத்தில் அமெரிக்கா ஆயுதக் குறைப்புப் பற்றி பேசி வருகிறது. மறுபுறம் போர் விமானங்களை விற்பனை செய்து வருகிறது என சீன வெளியுறவு அமைச்சர் சியான் சி தான் ஜகார்த்தாவில் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஐ.நா வில் சீர் திருத்தங்கள் செய்யப்பட முன்னர் உறுப்பு நாடுகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## ஆப்கானில் பெருவெள்ளம்; 3000 பேர் உயிரிழந்தனர்

ஆப்கானிஸ்தானில் பெய்த பலத்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் குறைந்தபட்சம் 3000 பேர் வரை மரணமடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

வெள்ளப் பெருக்கினால் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்துகுஸ் மலையடிவாரத்தின் மேற்குப் பகுதியில் உள்ள மூன்று பள்ளத் தாக்குகளில் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தால் அழிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதேசமயம் 14ஆண்டுகாலப் போரினால் அழிந்திருந்த பல வீடுகளை இப்பகுதி மக்கள் வெள்ளப்பெருக்கு ஏற்பட முன்னர்தான் கட்டி முடித்திருந்தார்கள்.

---

கில் மத்திய புலனாய்வு பணியகமான சி. பி. ஐ தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை செல்லுபடியற்றது என்று டில்லி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் சி. பி. ஐ.யினால் சுவீடன் மற்றும் சுவிட்சலாந்து நாட்டு அரசுகளுக்கு அனுப்பப்பட்ட ஒத்துழைப்புக் கோரும் கடிதங்களும் செல்லுபடியற்றவை என்று டில்லி நீதி மன்றம் கூறியுள்ளது

ஏ. பி. போபர்ஸ் என்ற சுவீடன் நாட்டு நிறுவனத்திடமிருந்து போபர்ஸ் பீரங்கி வாங்கப்படுவதற்காக பெருந்தொகைப்பணம் கைமாறியதாகக் கூறப்பட்ட சி. பி. ஐ பட்டது.

டில்லி நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக சி. பி. ஐ அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு இடைக்கால தடை உத்தரவு பெறப்போவதாகவும் அவர்கள் மேலும் கூறினர்

115 பக்கங்கள் கொண்ட இந்த வழக்கின் தீர்ப்பில் ஊகங்கள், சந்தேகங்கள் என்பவற்றின் அடிப்படையில் அரச ஊழியருக்கு எதிராக விசாரணை தொடர்ந்து நடத்தப்பட முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

## ரஷ்யத் தலைவர் யெல்சின் ஜனவரியில் டில்லி விஜயம்

(மாஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் 1993 ஜனவரிமாதம் அரசமுறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வருகிறார் என்று இந்தியா மற்றும் ரஷ்யத் தரப்புக்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட பிறகு முதல் முறையாக இந்தியா வருகைதரவிருக்கும் அவர், இரு தரப்பு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உறவுகள் பற்றிப் பேசுவதோடு ரஷ்ய—இந்திய நட்புறவு ஒப்பந்தம் ஒன்றிலும் கையொப்பமிடுவார்.

---

பாதுகாப்பு, சமாதான அடிப்படையில்

## உலகில் புதிய ஒழுங்கு ஏற்பட

### அணிசேரா மாநாடு அறைகூவல்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு சமாதானம், பாதுகாப்பு பொருளாதாரச் சுதந்திரம், சமூகநீதி ஆகியவற்றின்அடிப்படையிலான புதிய உலக அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றகோரிக்கையை விடுத்துள்ளது ஐக்கிய நாடுகளின் சாசனமும், சர்வதேச சட்டமும் புதிய உலக அமைப்பை உருவாக்குவதற்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்றும் அணிசேரா இயக்கத்தின் தலைவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

இத்துடன் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக விவகாரங்கள் தொடர்பான அறிக்கைகளும்இன்று ஜாகார்த்தாவில் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் கூட்டுப் பிரகடனங்களாக வெளியிடப்படவுள்ளன. இவற்றில் பாலஸ்தீன, தென்ஆபிரிக்க விவகாரங்கள் தொடர்பான தனித்தனி அறிக்கைகளும் வெளியிடப்பட இருக்கிறது.

ஈழநாதம்

# அகதிகளுக்கு எதிரான தாக்குதல் ஜேர்மன் பாராளுமன்றத்தில் ஆராய்வு

ஜேர்மன் பாராளுமன்ற அங்கத்தினர்கள் நாட்டைப் பாதித்து வரும் வலது சாரிய பலாத்காரம் பற்றி அவசரக் கூட்டம் ஒன்றை நடாத்தி ஆராய்ந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

பாராளுமன்ற உள்விவகாரக் கமிட்டி மூன்று மணி நேரம் ஆலோசனை நடாத்தியது. இருப்பினும், எவ்விதம் பலாத்காரத்தைத் தணிப்பது என்பது பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சி இணங்க வேண்டும் என அரசாங்க கட்சியைச் சேர்ந்தோர் வற்புறுத்தியுள்ளனர்.

ஜேர்மனியின் தாராள அகதிகள் சட்டம் இறுக்கப்பட வேண்டும் எனப் பிரதமர் ஹெல்மட் கோல் வற்புறுத்தி வருகின்ற போதும், கட்சிக்குள்ளேயே இதற்கு எதிர்ப்பு இருந்துவருகின்றது

அதே சமயம் கிழக்கு ஐரோப்பா மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து இவ்வாண்டு 5 இலட்சம் அகதிகள் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு அகதிகளுக்கான விடுதிகள் மீது தாக்குதல்கள் மேலும் இடம் பெறக் கூடும் என தான் எதிர்பார்ப்பதாய் பிராண்டன் பேர்க் மாகண உள்நாட்டமைச்சர் தெரிவித்தார்.

தற்போது இளம் வலது சாரிகளின் தாக்குதல்கள் ரொஸ்டாக்கில் இருந்து மேலும் 7 நகரங்களுக்குப் பரவியுள்ளது.

## தனியார் கல்வி நிறுவனங்களின் ஒழுங்கு விதிகள்

1. தனியார் கல்வி நிறுவனங்களில் தாம் கற்கவேண்டிய பாடங்களைத் தெரியும் உரிமை மாணவர்கட்கு உரியதாகும்.
2. ஒரு பாடத்திற்கு ஒரு மாணவரிடம் ஒரு கட்டணம் மட்டுமே அறவிடப்பட வேண்டும் வெவ்வேறு பாட அலகுகளுக்கு கட்டணம் அறவிடக்கூடாது.
3. வினாவிடை வகுப்புகட்கு தனியாக மேலதிகக் கட்டணம் அறவிடக்கூடாது.
4. மாணவர்களின் எண்ணிக்கையிலும் ஒன்றியம் மேற்கொண்ட தொகைக்கு மேலதிகமாக அனுமதிக்கக் கூடாது.
5. தற்போது நடைமுறையில் இருக்கும் கட்டண வீதத்தில் எக்காரணம் கொண்டும் மாற்றங்கள் ஏற்படுத்தக்கூடாது.
6. சாதாரணம் (க.பொ.த. உட்பட்டவகுப்பு) பகல்நேர வகுப்பு அதிகூடிய மொத்த கட்டணம் ரூபா 120/- காலை மாலை, வார இறுதி வகுப்பு அதிகூடிய கட்டணம் ரூபா 90/- 6 க்கு மேற்பட்ட பாடங்களுக்கு மேலதிகமாக 10/- அறவிடலாம்.
7. உயர்தரம் (க.பொ.த) பகல்நேரவகுப்பு (அதிகூடிய கட்டணம்) ரூ 120/- (ஒரு பாடம் 30/-) காலை, மாலை வார இறுதி வகுப்பு [அதிகூடிய கட்டணம் ரூ 100/- (ஒரு பாடம் 25/-)
8. தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்தும் பாடசாலை நாட்களில் அதிகாலை வகுப்புக்கள் எதனையும் நடாத்துதல் ஆகாது.
9. திங்கள், புதன், வெள்ளி, ஆகிய மூன்று நாட்களும் பூரணமான விடுமுறை நாட்களாகும். இந்நாட்களில் வகுப்புக்கள் அல்லது நிகழ்ச்சிகள் எதனையும் நடாத்துதல் ஆகாது.

## 42 ஆவது ஆண்டு விழா

(உரும்பராய்)

உரும்பராய் ஞானவைரவர் சனசமுக நிலையம் தனது 42 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று தொடக்கம் பதினோராம் திகதி வரையான காலத்தை நிலைய ஆண்டு விழா வாரமாகக் கொண்டாட இருக்கிறது இதனை முன்னிட்டு உரும்பராய் பிரதேசத்திற்குட்பட்ட சகல சனசமுக நிலையங்களும் விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றும் விதத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன

நேற்று காலை பத்து மணிக்கு ஆரம்பமாகிய விளையாட்டுக்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி முடிவடையும் இறுதி நாளன்று மாலை 6.30 மணிக்கு பரிசளிப்பு விழாவும், நிலைய முன்றலில் வில்லுப்பாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் இதே வேளை நாளை மாலை 7.00 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் மகா வித்தியாலயத்தில் நிலைய நிதிக்காக ''சிறை'' நாடகமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (03)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கக் கூட்டம் வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெறும் என தொண்டர்

## கைக் குண்டு வீச்சு

கல்முனை தமிழ்க் கிராமமான மூன்றாம் குறிச்சிப் பகுதியில் வீசப்பட்ட கைக் குண்டு ஒன்றினால் ஒரு பெண் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இனந் தெரியாத நபர்கள் இக் கைக் குண்டை வீசியதாக சிறிலங்கா படையினர் தெரிவித்துள்ளனர்.

## நீதிமன்றத்தை அவமதிக்கும் பிரசுரங்கள் வெளியீடு

(கொழும்பு)

சிறிலங்காவின் நீதிபரிபாலனத்துறையை அவமானப்படுத்தும் வகையில் ஆபாசமாகவும், இழிவாகவும் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான தீர்வு செவ்வாயன்று வழங்கப்பட்ட பிறகு இழிவான வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் ஹெல்ஸ்ரப்பிலும், புறக்கோட்டைப் பகுதியிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி வழக்கு மீதான தீர்ப்பில் அதிருப்தியுற்ற அரசியல் வாதிகள் இந்தத் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

## மயக்கமருந்து கொடுத்து பணம் கொள்ளை

வங்கியில் பணத்தை வைப்பிலிடச் சென்ற நபர் ஒருவர் மயக்கமருந்து பிடிக்கப்பட்டு மயங்கிய பின் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

காலியில் வங்கியை நோக்கிச் சென்று கொண்டிருந்த நபரை காரில் வந்தவர்கள் மயக்கி தங்காலைக்கு கடத்திச் சென்று 25.000 ரூபா பணத்தையும் 5000 ரூபா பெறுமதியான நகைகளையும் பறித்துக் கொண்டனர் சந்தேக நபர்களை பொலிசார் தேடி வருகின்றனர்.

## பராக்கிரமபாகு சமுத்திரம் முற்றாக வற்றியது

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பராக்கிரம சமுத்திரம் முழுமையாக வற்றி விட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன நாட்டில் உள்ள மிகப் பெரிய குளங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இக்குளமானது நீரின்றி பாளம், பாளமாக வெடித்த நிலையில் உள்ள படத்தை கொழும்புப் பத்திரிகையொன்று அண்மையில் வெளியிட்டிருந்தது அத்துடன் வடமத்திய மாகாணமும் வரட்சியால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## விமானப் பிரயாணி பரசூட் மூலம் குதித்தார்

பல்கேரிய விமானம் ஒன்றில் இருந்து ஒரு மனிதர் பரசூட் மூலம் குதித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவசர சந்தர்ப்பங்களின் போது உபயோகிக்கப்படும் விமானக் கதவைத் திறக்கும்படி விமானச் சிப்பந்திகளைப் பலவந்தப்படுத்தி அதனூடாகவே குதித்துள்ளார்.

அதே சமயம் துண்டுப்பிரசுரங்களையும் வீசியுள்ளார். இவ்வாறு விமானத்தைக் குறைந்த உயரத்தில் பறக்கும்படி பலவந்தப்படுத்தி, அவசரக் கதவினூடாகப் ''பரசூட்'' மூலம் பாய்ந்தவர் ஒரு வியட்நாமியர் எனக் கூறப்படுகிறது.

இந்நபரை வியட்நாமிய அதிகாரிகள் தேடி வருவதாய் பல்கேரிய தனியார் விமான நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

உலகின் விமானப் போக்குவரத்து வரலாற்றிலேயே இது ஒரு புதுமைச் சம்பவம் எனக் கருதப்படுகிறது.

## விபத்தில்

# தியாகி திலீபன் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் ஏற்பாடுகள்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வுகள் இம்மாதம் 15ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரையான பதினொரு நாட்களும் சிறப்புற நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு சம்பந்தமான அனைத்து போட்டி நிகழ்வுகளும் இம்மாதம் 14ஆம் திகதியுடன் முடிவுறும்.

15ஆம் திகதி முதல் வட்ட மட்டத்தில் பொதுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு தினமும் காலை 7 00 மணி முதல் மாலை 5 00 மணிவரை மக்கள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்தில் இப் பதினொரு நாட்களும் காலை ஒன்று கூடல் நிகழ்வில் தியாகி திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துவதோடு சிறு நினைவு கூரல் கருத்தரங்குகளும் இந் நாட்களில் ஒருநாள் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர், மாணவர்கள் சேர்ந்து தியாகி திலீபனை உணர்வு பூர்வமாக நினைவு கூரும் கூட்டமும் நடாத்தப்படவுள்ளன

கடைசி நாளான 26 ஆம் திகதி கோட்டமட்டத்தில் உயர் வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் உண்ணாவிரதம், அஞ்சலிக் கூட்டம் என்பன இடம் பெறும்

உண்ணாவிரதம் நடைபெறும் நாட்களில் மாலை 3 00 மணி தொடக்கம் 5.00 மணிவரை தியாகி திலீபனின் ஒளிப்பதிவு நாடா காண்பிக்கப்படும்.

இக்காலப் பகுதியின் முதல் பத்துநாட்களும் பொதுமக்களுக்கு நலன் தரக்கூடிய சிரமதானங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இறுதி நாளான 26 ஆம் திகதி மாலை 5 05 மணிக்கு கோட்ட மட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் பொதுக் கூட்டங்கள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

### பட்டமளிப்பு விழாவில்...

நேற்றுக் காலை யாழ் பல்கலைக்கழகத்தின் 12 ஆவது பட்டமளிப்பு விழா கைலாசபதி கலையரங்கில் இனிது நடைபெற்றது.

இத்தனை ஆண்டுகள் சென்றும் இத்தகைய விழாக்களில் பத்திரிகைத் துறையினரை எவ்வாறு நடத்த வேண்டும் என யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்குத் தெரிந்திருக்காதது விந்தையிலும் விந்தையே.

தியாகி திலீபன் நினைவு

## தடகள விழாவின் இறுதி நாள் இன்றாகும்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு 2 ஆம் தடகள விழா இன்று இறுதிநாளாகும். இன்று காலை 9.00 மணிக்கு விழா ஆரம்பமாகும் மாலை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மேலைத்தேய வாத்திய இசையும் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும்

## தியாகி திலீபன் நினைவு தடகள விழா-1992

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு 2-ம் தடகள விழா. நேற்றுவரை முடிவுகள்.

| வட்டப்பிரதேசம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 08 | 07 | 04 |
| யாழ்ப்பாணம் | 04 | 01 | 02 |
| தெல்லிப்பழை | 03 | 04 | 04 |
| நல்லூர் | 03 | 05 | 03 |
| பருத்தித்துறை | 02 | 03 | 03 |
| தீவகம் | 02 | — | 02 |
| உடுவில் | 01 | 02 | — |
| கரவெட்டி | — | 01 | 01 |

பூரணமான விடுமுறை நாட்களாகும். இநநாட்களில் வகுப்புக்கள் அல்லது நிகழ்ச்சிகள் எதனையும் நடாத்துதல் ஆகாது.

குறிப்பு:- திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் பாடசாலைக் கல்விக்குப் புறம்பான கற்கை நெறிகளுக்குரிய வகுப்புக்கள் நடாத்தப்படலாம்

இந் நாட்களில் இவ் வகுப்புக்களை நடாத்த விரும்புபவர்கள் தமது கோட்டக் கல்வி நிறுவனத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

10. செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மாலைநேர வகுப்புக்கள் பிற்பகல் 3.00 மணிக்கும். 6 30 மணிக்கும் இடையில் மட்டும் நடைபெறுதல் வேண்டும்.

11. பகல் நேர வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் காலை 8 00 மணிககும் மாலை 2.00 மணிக்கும் இடையில் நடைபெறுதல் வேண்டும்.

12. சனி, ஞாயிறு நாட்களில் காலை 6.00 மணிக்கும், மாலை6 30 மணிக்கும் இடையில் வகுப்புக்கள் நடைபெறுதல் வேண்டும்.

13. பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், ஆசிரியர் பயிநசிக் கலாசாலையில், தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் நிரந்தர, தற்காலிக ஆசிரியர்கள் எவரும் பகல் நேர வகுப்புக்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுதல் ஆகாது.

14. அரச, கூட்டுத்தாபன, கூட்டுறவு ஆகிய துறைகளில் பணியாற்றும் நிரந்தர், தற்காலிக ஊழியர்கள் எவரும் பகல் நேர வகுப்புக்களில் தனியார் கல்விநிறுவனங்களில் பணியாற்றுதல் ஆகாது.

15. வெளிமாவட்டங்களில் பணியாற்றுபவர்களும் இவ் ஒழுங்கு விதியினைப் பின்பற்றுதல் வேண்டும்.

16. அரசாங்க பொது விடுமுறைக்காக பாடசாலைகள் சனிக்கிழமை பதில் வகுப்பு வைக்கும் போது பொது விடுமுறை நாளில் மட்டும் தனியார் கல்வி நிலையம் சனிக்கிழமை நேர சூசியின்படி வகுப்புக்கள் நடாத்தலாம்.

17. எந்த கற்கை நெறிக்கும் மொத்தக் கட்டணங்கள் முன் கூட்டியே பெறறுக் கொள்ளக் கூடாது.

18. புத்தகங்கள், பாடக்குறிப்புகள் நியாயவிலையில் விற்கப்பட வேண்டும்.

19. நெருக்கடியான இடத்தில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தக் கூடாது. நிறுவனத்தில் மாணவர்களின்ஒழுங்கு, கட்டுப்பாடு கண்காணிக்கப்பட வேண்டும். வீதி விபத்துக்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

20. நிறுவனத்தின் மொத்த நிதி வசூலிப்பில் 10வீதஉதவு தொகை வழங்கப்பட வேண்டும்.

(சி-5011)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெறும் என தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் செ. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

சகல தொண்டர் ஆசிரியர்களையும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## உப்பு விளைச்சல்

(வடமராட்சி கிழக்கு)

செம்பியன்பற்று கடநீரேரிப் பகுதியில் உப்பு விளைந்துள்ளது.

பெருந்தொகையான மக்கள் உப்பினை அள்ளிச்செல்கின்றார்கள்.

## யூரியாவிற்கு தொடர்ந்தும் தடை

(கொழும்பு)

யூரியாவைத் தவிர ஏனைய உரவகைகளையும், ஏனைய விவசாயத் தொழிற்துறைக்குத் தேவையான உபகரணங்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர் என தெரியவருகிறது.

ஆனால் யூரியாவே அத்தியாவசியமான உரவகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தியத்தலாவையில் எரிமலை?

தியத்தலாவையில் எரிமலை இருப்பதாகக் கருதப்படும் இடத்தில் இருந்து நேற்று முன்கினம் காலைமுதல் புகை கிளம்பிக்கொண்டிருப்பதாய்த் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இப்பகுதியின் வெப்பநிலை மேலும் 150 பாகை பரனைட்டால் அதிகரித்து 550 பாகைபரனைட்டாகக் காணப்பட்டது இப்பகுதியில் உள்ள மரங்கள் யாவும் கருகிவிட்டன. எரிமலை வெடிக்கக்கூடிய ஆபத்துள்ளதால் இப்பகுதியில் மக்கள் நடமாடக் கூடாது என பொலிசார் தடை செய்துள்ளனர். பூகற்பவியலாளர்கள் இது குறித்து ஆய்வு செய்கின்றனர்.

குறைந்த உயரத்தில் பறக்கும்படி பலவந்தப்படுத்தி, அவ

## துப்பாக்கி பிரயோகம்

(குருநகர்)

மண்டைதீவுச் சந்தியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் காவலரணில் இருந்து நேற்று பிற்பகல் 3-55 மணி தொடக்கம் 50 கலிபர் சினைப்பர் தாக்குதலை நடத்தினர்.

குருநகர், அலுப்பாந்தி, கோட்டை, பண்ணை, கொட்டடிப் பகுதிகளைக் குறிவைத்து தொடர்ச்சியாக 50 கலிபர் தாச்குதலும் இடையிடையே சினைப்பர் தாக்குதலும் நடத்தப்பட்டன (21)

## மாவீரர்களை

நின்றவர்கள், எதிரியைத் தேடிச் சென்றவர்கள்; தங்கள் வீரத்தால் எதிரியை வியக்க வைத்தவர்கள். வீரமாகச் சாவைச் சந்தித்தவர்கள் எமக்கும், எம் தேசத்திற்கும் பெருமை சேர்த்தவர்கள் எங்களிடம் எதையுமே எதிர்பார்க்காதவர்கள் எம் விடுதலைக்காக, நல் வாழ்வுக்காகப் போராடியவர்கள் இவர்கள் எல்லோரும் எங்கள் பிள்ளைகள், உடன் பிறந்தவர்கள்.

மாவீரர் நாளான நவம்பர் 27 இல் நாம் இவர்களைச் சிறப்பாக நினைவு கூருவோம். அவர்கள் வீரத்திற்கும், தற்கொடைக்கும் வணக்கம் செய்வோம். நாம் எல்லோரும் இந்நாளைச்சிறப்பாக நினைவு கூர எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசு

ஆகவே மலையகத்தில்உள்ள சகல சக்திகளும் இந்த 84 ஆயிரம் பேருக்கும் இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதில் அக்கறையும், தீவிரமும் காட்டவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## விபத்தில் 40பேர் மரணம்

(டில்லி)

இந்தியாவில், மத்திய பிரதேச மாநிலத்தில் பயணிகள் புகைவண்டியும் சரக்கு புகைவண்டியும் மோதிக்கொண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இவ்விபத்தில் 40பேர் கொல்லப்பட்டதுடன் 100பேர்வரை காயமடைந்துள்ளனர்.

## பரீட்சை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மாகாசிவம் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரைக் கடிதமூலம் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு இறுதிப் பரீட்சை 13-10-92-ல் ஆரம்பமாகிறது என்றும் அக்கடிதத்தில் காட்டப்பட்டுள்ளது.

மேலும் யாழ் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபங்கள் மற்றும் ஸ்தாபனக்கோவைக்கு அமைவாக பரீட்சைக்கு முந்திய ஒரு மாத காலத்திற்கும், பரீட்சைக் காலத்திற்கும் படிப்பு லீவு வழங்குமாறும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது யாழ். பல்கலைக் கழகத்தில் வெளிவாரி கலை, வர்த்தக முதற்தேர்வு 14-09 92-ல் ஆரம்பமாகிறது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

கல்விச் சேவைச் சபையின் 1992 பெப்ரவரி 27-ம் திகதிய க. சே. கு/ஆதா / 5 / 1 சுற்று நிருபத்திற்கு அமைவாக பட்டதாரிப் பட்டம்பெற்ற சகல பயிலுநர்களையும் பட்டதாரிப் பயிலுனராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தாமதியாது இவர்களைப் பட்டதாரி பயிலுனராக நியமிக்க ஆவன செய்யுமாறும் பொதுச் செயலாளர் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| உடுவில் | 01 | 02 | — |
| கரவெட்டி | — | 01 | 01 |

சங்கானை. கோப்பாய், பளை ஆகிய வட்டப் பிரதேசங்கள் தலா ஒரு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றன.

நேற்றைய போட்டியில் ஆண்களுக்கான முப்பாச்சல், பெண்களுக்கான உயரம் பாய்தல், பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் புதிய சாதனைகள்நிலைநாட்டப்பட்டன.

## மரண அறிவித்தல்

## சோமசுந்தர ஐயர் சிவசர்மா

மணற்காடு காரைநகரைச் சேர்ந்தவரும், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய பிரதம பூசகருமான சோமசுந்தர ஐயர்சிவசர்மா கடந்த மூன்றாம் திகதி (03-09-1992) அதிகாலை சிவபதமெய்தினார் இவர் காலஞ்சென்றசாரதாம்பாளின் அன்புக் கணவராவார் அன்னாரது இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணம், பிறவுண்வீதி, இல. 03, 2 ஆம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

தகவல்
சி.கமலநாதன்

(சி/5014)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 05-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5522

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

28-1111, 24-4207, 26-7393 40-0919, 42-266, 24-6480, 26-5846, 42-9625 26-1019, 22-8855, 24-5137. 24-4664, 22-7956, 36-2954, 41-1227, 26-9797, 26-2545, 27 9404, 27-658[illegible], 26-6320, 28-3233, 26-8674, 26-4727, 27-7627, 41-5583, 24-4747

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

41-9038. 26-4450. 24-4292, 27-9779, 24-5127, 42-3329, 26-8415, 24-5774 40 1714, 42-9220, 24 4707, 41-6893, 40-7207, 40-7584, 26-1741